# முத்துலட்சுமி ராகவன் நாவல்களில் குடும்பச் சிந்தனைகள்

# Family Thoughts in Muthulakshmi Raghavan's Novels

***முனைவர் ஆ. சந்திரசேகரன்***
தமிழ் உதவிப் பேராசிரியர்
விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி(தன்னாட்சி)
எளையாம்பாளையம், திருச்செங்கோடு
நாமக்கல் மாவட்டம்

**Dr. A. Chandrasekharan**
*Assistant Professor of Tamil*
*Vivekananda College of Arts and Science for Women (Autonomous)*
*Elaiyampalayam, Tiruchengode*
*Namakkal District*

## ஆய்வுச் சுருக்கம்

*குடும்பம் என்பது பல்வேறு சிக்கல்களுக்கிடையேயும் தொடர்ந்து இயங்கி வருகிறது. அதே வேளையில் ஏற்கனவே உருவாக்கப்பட்டு காலங்காலமாக இயங்கி வரும் குடும்ப அமைப்புகள் பல்வேறு மாற்றங்களைக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. திருமணங்கள் மூலம் புதிய குடும்பங்கள் உருவாகி வருகின்றன. குடும்பம் பற்றிக் குறிப்பிடும்பொழுது பலவிதமான கருத்துக்கள் நிலவி வருகின்றன. சமுதாயத்தில் மிகப் பழமையான நிறுவனம் குடும்பம் ஆகும். பிறப்பு முதல் இறப்பு வரை குடும்பத்துடன்தான் மக்கள் தொடர்ச்சியாகத் தொடர்பு கொள்கின்றனர். அதனால் மக்களின் வாழ்வியல் சார்ந்த அனைத்துத் தேவைகளையும் நிறைவு செய்கிறது. அதனால் குடும்பம் என்ற அமைப்பு காலம், இடம் என அனைத்தையும் கடந்து எல்லாப் பண்பாடுகளுக்கும் ஒரு பொதுவான பண்பாகத் திகழ்கிறது.*

***முக்கியச்சொற்கள்:*** *குடும்பம், முத்துலட்சுமி ராகவன், குடும்பச் சிந்தனைகள், சமூகம், சமூகவியல்*

## Abstract

*The family continues to operate in the midst of various problems. At the same time, the family organizations that have already been created and have been in operation since time immemorial are undergoing various changes. New families are emerging through marriages. There are many different opinions when it comes to family. The oldest institution in the society is the family. From birth to death, people are constantly in touch with the family. Therefore, it satisfies all the living needs of the people. Hence, the structure of the family, cutting across time and space, is a common characteristic of all cultures.*

***Keywords:*** *Family, Muthulakshmi Raghavan, Family Thoughts, Society, Sociology*

**Citation**

Chandrasekharan, A. "Family Thoughts in Muthulakshmi Raghavan's Novels." *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 2, 2023, pp. 103–108.

CC BY SA

*https://doi.org/10.5281/zenodo.20096749*

**குடும்பம் - பொது வரையறை**

*குடும்பம் என்பதற்குப் பல்வேறு வரையறைகள் ஆய்வாளர்களால் சுட்டிக் காட்டப்படுகிறது. குடும்பம் பல்வேறு நெறிகள், வழக்குகள், வழக்கடிப்பாடுகள் ஆகியவற்றைக் கொண்டிருப்பதோடு மட்டுமல்லாமல் பல்வேறு செயற்பாடுகளால் விரிவடைந்து பல்வேறு பொறுப்புகளைப் பணிகளைக் கொண்டதாகவும் விளங்குகின்றது.*

**குடும்ப அமைப்பு**

*குடும்பம் மனித வாழ்க்கையில் அனைவரும் பெற வேண்டிய ஒரு அமைப்பாகும். அதைப் பெறாத போது வாழ்க்கை பயனற்றுப் போகிறது எனலாம்.*

*மானிட சமுதாயம் தோன்றிய நாள் முதற்றே குடும்பம் என்னும் அமைப்பு நிலவி வருகிறது. சமுதாயமானது குழுக்களின் பிணைப்பால் இணைந்திருப்பினும், மனித நிறுவனங்களில் குடும்பமே சிறந்த நிறுவனமாக மனித வாழ்வின் அடிப்படை அலகாகக் கருதப்படுகிறது. இவ்வாறு மனித சமுதாயத்தின் தலையாய நிறுவனமாக அமைவது குடும்பமே ஆகும்.*

**குடும்பம் - விளக்கம்**

*கணவன், மனைவி, குழந்தைகள், உறவினர் என அனைவரும் கூடி வாழும் ஒரு சமூக அமைப்பு வாழ்க்கையே குடும்ப அமைப்பு என்கிறோம். சமூகவியலாளர் மனித குலத்தின் அடிப்படை அலகு குடும்பம் என்பர். இலக்கியங்களில் குடி, மனை, அறம், குடிமை, இல் என்ற சொற்கள் குடும்பத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன.*

*மனைவி மக்களோடு வாழும் இல்லறமே நல்லறமாகும். பிறர் பழித்துப் பேசாத அளவுக்கு அவர்களை அரவணைத்துச் செல்வதே குடும்பக் கடமைகளில் ஒன்றாகும். சமூகம் உருவானவுடன் திருமணத்தின் மூலம் புதிய குடும்பம் உருவாக்கப்படுகிறது. இதனை,*

*ஒரே விதமான எண்ணங்களை உடைய மனிதர்கள் தங்களுடைய ஒத்த தன்மையை உணர்ந்து, அதன் காரணமாகப் பொதுவான நோக்கங்களை அடையச் சேர்ந்து முயல்கின்ற பொழுது சமூகம் உருவாகிறது.*[1] என்பது கிட்டிங்ஸ் கருத்தாகும்

*சமூகம் உருவானவுடன் அதில் முதன்மையானது திருமணம். மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு சடங்கின் மூலம் ஆணும் பெண்ணும் புதிய குடும்பத்தை உருவாக்கிக் கொள்ள நிறுவப்பட்ட ஒரு வினையே மணம் ஆகும். எனவே அதுவும் ஒரு நிறுவனம் ஆகும். மணத்திற்குப் பிறகு கணவன், மனைவி உறவு நிலைபெற்றதாகிறது.*[2] என்ற கூற்றின் மூலம் அறியலாம்.

*குடும்பத்தில் உள்ள பல்வேறு உறவுகளான கணவன் - மனைவி உறவு, தாய் - மகள் உறவு, தாய் - மகன் உறவு, தந்தை - மகன் உறவு, தந்தை - மகள் உறவு, அக்கா - தங்கை உறவு, அண்ணன் - தங்கை உறவு, தாத்தா - பேரன் உறவு போன்ற உறவுநிலைகள் ஆய்வுநாவல்களில் அமைந்துள்ள விதம் பற்றி இவ்வியலில் ஆராயப்படுகிறது.*

**கணவன் - மனைவி உறவுமுறை**

*குடும்பமானது திருமணத்தின் மூலம் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே நிலையானதொரு*

*நெருக்கமான பிணைப்பை உண்டாக்குகிறது. அது அவர்களுடைய உறவுகளை ஒரு குறிப்பிட்ட வழியில் ஒழுங்குபடுத்துகிறது. அந்தப் பிணைப்பு இருவருக்குமிடையே ஒருவித ஈடுபாட்டையும் கவர்ச்சியையும் பொதுநல உணர்வையும் கணவன் மனைவி என்ற இரத்த உறவையுமே முதன்மையாகக் கொள்கின்றது. இதனை,*

*ஓர் ஆடவனும் ஒரு பெண்ணும் மணவாழ்க்கை மூலம் பெறப்படும் சமூக அந்தஸ்தான கணவன், மனைவி உறவு முறை ஒரு குடும்பம் என்று அடையாளம் காட்ட அடிப்படையாய் அமைகிறது.*[3] *என்ற கூற்று கணவன் மனைவி உறவை அடையாளப்படுத்துகிறது.*

*குடும்பம் நடத்துவதற்கு கணவன் மனைவி இருவரும் குடும்பப் பொறுப்பில் பங்கெடுத்துக் காள்ள வேண்டும். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து அனுசரித்தால் அன்பும் பாசமும் கொண்டு வாழலாம். அனைத்து இன்பங்களையும் பெறலாம். கணவன் மனைவி உறவில் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு வாழும்போது அங்கு சிக்கல்கள் ஏற்படுவதில்லை என்பதை,*

*கணவன் மனைவி உறவு என்பது மனம் ஒன்றாக அன்பில் திளைத்து ஒன்று மற்றொன்றிற்காக வாழும் அன்றில் தத்துவமாக இலங்க வேண்டும்.*[4] *என்று ஜெயகாந்தன் கூறுகிறார்.*

**மனம் விட்டுப் பேசுதல்**

*கணவன் மனைவி இருவரும் மனம் விட்டுப் பேசுவதால் ஒருவரின் உணர்வை மற்றவர் புரிந்துகொள்ள முடியும். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துப் போவதால் குடும்ப வாழ்வில் பலவித சிக்கல்கள் வராமல் தவிர்க்க இயலும்.*

*அந்திவானம் என்ற நாவலில் சங்கர்- யமுனா தம்பதியின் மகள் மாளவிகாவை சங்கரின் தங்கை மகன் வசந்த் என்வருக்கு திடீரென திருமணம் செய்து வைத்தார். சங்கரின் தங்கை வீட்டார் தன் மகளை ஏற்றுக் கொள்வார்களா என்றுமனம் வருந்துகிறார். அவ்வாறு மனம் வருந்திய நிலையில் இருக்கும் கணவனுக்கு மனைவி ஆறுதலாக இருப்பதை,*

*பயமா இருக்கு யமுனா என்னை நினைத்துக்கிட்டு என் மகளை இன்னும் என்னவெல்லாம் கொடுமை செய்வாரோன்னு பயமாய் இருக்கு*

*ஊஹம் ? அவ்வளவு பயப்படுகிறவர் மணமேடையில் மாலையும் கழுத்துமாக இருக்கிற பெண்ணை எழுந்து வான்னு சொல்லியிருக்கக் கூடாது*

*நான் என்னடி செய்ய..? அவர் என் தங்கையின் மகன்..*[5] *என்ற கூற்றில் கணவனும் மனைவியும் மனம் விட்டுப் பேசி ஒருவருக்கொருவர் ஆறுதலாக இருப்பதை அறியமுடிகிறது.*

*பூமிக்கு வந்த நிலவு என்ற நாவலில் கயிலைநாதனும் பாரிஜாதமும் தன் மகன் மாடியில் தூங்குவதை தவறாக நினைக்கவில்லை. ஏனெனில் உறவுக்காரப் பெண் மேல் மாடியில் தூங்குகிறாள். அவளைத் தேடிப்போகவில்லை. அசதியில்தான் போய்த் தூங்கியிருப்பான் என்று கணவனும் மனைவியும் பேசிக்கொள்கின்றனர். இதனை,*

*எதுவும் தப்பா நடக்கலைடி .. தசரதன் தெரியாமத்தான் மாடி ரூமுக்கு போயிருக்கான்.*

ஜாமத்துக்கு மேலே ஆகிருச்சு அசதியில படுத்தவுடன் அப்படியே தூங்கியிருப்பான்.[6] என்ற கூற்றின் மூலம் அறியலாம்.

நிழலோடு நிழலாக என்ற நாவலில் வரும் காமே; என்பவரும் அவரது மனைவியும் அவரது நண்பர் பாண்டியன் திருமணத்திற்குச் செல்கின்றனர். பாண்டியன் திருமணம் செய்துகொள்ளும் பெண் அழகாக இருக்கிறாள் என்று இருவரும் பேசிக்கொள்கின்றனர். இதனை,

பெண் ரொம்ப அழகு இப்போத் தெரியுது. உங்க சிநேகிதர் ஏன் இந்தப் பெண்தான் வேண்டும் என்று ஒற்றைக்காலில் நின்றார் என்பது ?[7] என்று மணப்பெண்ணின் அழகு பற்றி தன் கணவரிடம் மனைவி மனம் விட்டுப் பேசுவதாகப் படைத்துக்காட்டியுள்ளார் ஆசிரியர்.

மேலும் இந்நாவலில் பாண்டியனின் மாமனாரும் மாமியாரும் பாண்டியனைப் பற்றிப் பேசிக் கொள்கின்றனர். திருமணம் முடிந்தவுடன் வேலை நிமித்தமாக மருமகன் மகளை விட்டுப் பிரிந்து செல்வதை நினைத்து வருந்துகின்றனர். இருப்பினும் கணவர் மனைவியிடம் மாப்பிள்ளைக்கு அவர் வேலை பார்க்கிற இடத்திலிருந்து உடனே வரச்சொல்லியுள்ளனர் என்று தன் மனைவி கற்பகத்திடம் மனம் விட்டுப் பேசுகிறார். இதில் கணவனும் மனைவியும் மகளின் நிலையைக் கண்டு மனம் விட்டுப் பேசிக் கொள்வதை ஆசிரியர் படைத்துள்ளார்.

இந்த நிலையில் மனைவியிடம் தொலைபேசியில் பேசவேண்டுமென்று மகன் கேட்கிறான். அப்போது அந்தத் தாய் மருமகள் வெளியே போயிருக்கிறாள் என்று பொய்யாகச் சொல்கிறாள். ஆனால் மருமகளை அவள் பெற்றோர் வீட்டுக்கு அனுப்பிவிட்டனர். இதனை மறைத்துப் பேசுகிறாள். பரவாயில்லை சமாளித்துவிட்டாய் என்று ஆகிய கணவன் மனைவியிடம் பேசுகிறார்.

**கணவன் மனைவி பெருமை பற்றிப் பேசுதல்**

பூமிக்கு வந்த நிலவு என்ற நாவலில் தசரதன் தன் மனைவி வெண்ணிலாவைத் தான் பணியாற்றும் இடத்திற்கே வந்து தங்கிக் கொள்ள அழைக்கிறான். இதனை,

நீ எனக்கு சீதைதான்.. நானும் பெயரிலதான் தசரதன்.. மனசில ராமன்.. அந்த தசரதனக்குத்தான் ஆயிரக்கணக்கில் பொண்டாட்டிக இருந்தாங்களாம்.. இந்த தசரதனுக்கு வாழ்க்கையில் பொண்டாட்டிங்கிறது ஒருத்திதான்[8] என்று கணவன் மனைவியின் பெருமை பற்றிப் பேசுவதைக் காணமுடிகிறது.

தஞ்சமென வந்தவளே என்ற நாவலில் பிரதாபனுக்கு ஊர்மிளாவைத் திருமணம் செய்வதாக இருந்தது. அத்தகைய நிலையில் பிரதாபனின் முறைப்பெண் சாரதாவைத் திருமணம் செய்துகொள்ள முடிவெடுத்தனர். ஒரே நொடியில் சிக்கலைத் தீர்த்து வைத்துவிட்ட மனைவியின் மீது அவருக்குக் காதல் பெருகியது என்று ஆசிரியர் படைத்துக் காட்டியுள்ளார். நிழலோடு நிழலாக என்ற நாவலில் சாருலதாவும் பாண்டியனும் திருமணம் செய்து வாழ்ந்து வந்தனர். இந்நிலையில் பாண்டியன் தனிக்குடித்தனம் செல்லலாம் என்று தன் மனைவியை அழைக்கிறான். அதற்கு அவள் ஒத்துக் கொள்ளவில்லை. சேர்ந்து வாழ்ந்துதான் பழக்கம். குடும்பத்தைப் பிரிந்து தனிக்குடித்தனம் செல்ல வேண்டாம் என்று சாருலதா கூறுவதை,

என்ன வார்த்தை சொல்றீங்க ? தனிக்குடித்தனம் போவதா ? நாமா ? எனக்கு எல்லோர்

*கூடவும் சொந்தம் கொண்டாடி ஒத்துமையா இருந்துதாங்க பழக்கம். குடும்பத்தை பிரிக்கிற பழக்கமெல்லாம் எனக்கு சுட்டுப் போட்டாலும் வராது.[9] என்ற வரிகளில் ஆசிரியர் மனைவியின் பெருமையை வெளிப்படுத்தியுள்ளார்.*

*மோகத்தைக் கொன்றுவிடு என்ற நாவலில் கருணாகரன் சொத்துக்காக ஆசைப்பட்டுத்தான் சசிரேகாவைத் திருமணம் செய்துகொண்டான் என்று சசிரேகா தவறாக நினைத்துக் கொள்கிறாள். ஆதலால் சசிகோவுக்குக் கருணாகரனைப் பிடிக்கவில்லை. இதனை,*

*பயத்தில நடுங்கிச் செத்தாலும் சாவ ஆனா பால்கனிக் கதவைத் திறந்து ரூமுக்குள்ள வரமாட்ட அப்படித்தான? ஏண்டி? உள்ள இருக்கிறவன் உன் புருசன்தானே உன்னைத் தொட்டவனும்உன்புருசன்தானே.. புருசன்கிட்டயிருந்துதப்பிக்கநினைக்கிறபெண்டாட்டி இந்த உலகத்திலேயே நீ ஒருத்திதாண்டி[10] என்று இருவரும் பேசிக் கொள்வதை ஆசிரியர் படைத்துக்காட்டியுள்ளார்.*

*ஒரு பெண்ணை திருமணம் செய்துகொள்ள அவளின் சம்மதத்தைக் கேட்க வேண்டும். அவளுக்கும் மனம் உண்டு என்ற நினைவு இருக்க வேண்டும். அது துளியும் உன்னிடம் இல்லை. பெரியப்பாவுக்கு இவள் அடிமைதானே அந்தப் பெரியப்பாவுக்கு சொத்துத் தரேன்னு சொல்லி விட்டால் இவள் கழுத்தைப்பிடித்து நம்மிடம் கொடுத்துவிடுவார் என்று நினைத்துவிட்டீர்கள் என்று கூறுகிறாள். இதில் சொத்துக்காகத்தான் திருமணம் செய்துகொண்டானே தவிர மனம் ஒன்றிதிருமணம்செய்துகொள்ளவில்லைஎன்றுநினைத்துசசிரேகாகருணாகரனிடம் இவ்வாறு பேசுகிறாள்.*

**கணவன் - மனைவி பாசம்**

*மனைவி கருவுற்றிருக்கும் காலத்தில் அவள் மனம் விரும்பியதை வாங்கித் தருவது கணவனின் இயல்பு. யாரோடு யாரோ என்ற நாவலில் பவித்ரன் தன் மனைவி ரூபாவுக்கு ஆசைப்பட்டதை வாங்கித்தர ஆவலாக இருக்கிறான். இதனை,*

*இந்த மாதிரி டயங்களில் மனதில் ஆசைப்பட்டதைச் செய்துவிடவேண்டுமாம்.*
*உனக்கென்ன ஆசை? சொல்லு வாங்கித் தருகிறேன்..*
*பவித்ரன் கனிவோடு வினவ .. ரூபா அவனை உற்றுப்பார்த்தாள்..*
*என்ன .. கரிசன மழை பொங்கி வழியுது?*
*நீ வாயும் வயிறுமாய் இருக்கிறாய்[11] என்ற வரிகளின் மூலம் மனைவி மீது கணவன் கொண்டுள்ள அன்பினை அறியமுடிகிறது.*

**மகளின் செயலைக் கண்டு மகிழ்தல்**

*திருமணம் முடிந்து கணவன் வீடடில் செம்மையாக வாழ்வு நடத்தும் தன் மகளைக் கண்ட தந்தையும் தாயும் பேசிக்கொள்வதை, குறுந்தொகையில்*

*முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்*
*கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்*
*குவளை உண்கண் குய்புகை கழுமத்*
*தான்துழந்து அட்ட தீம்புளிப் பாகர்*
*இனிதெனக் கணவன் உண்டலின்*
*நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே[12] என்ற பாடல் மூலம் கணவனுக்கு*

*அன்பாக சமைத்துக் கொடுத்த மனைவியைக் காட்டுகிறார். காலைநேரக்காற்று என்ற நாவலில் இந்தக் குட்டியப் பாத்திங்களா அடுப்பில் உலையை வச்சிருக்கேன்.. கொஞ்சம் அரிசியைக் கழுவிப் போடுடி ஆத்தான்னு சொன்னதுக்கு என்னமா சண்டை வளத்தா.. இப்பப் பாருங்க.. அப்பன் பேச்சுச் சத்தம் கேட்டதும் ஆத்தாக்காரி சொல்லாமலே மோரைக் கரைச்சிக்கிட்டு ஓடி வர்றா[13] என்ற கூற்றின் மூலம் மகள் இல்லறம் நடத்தும் பாங்கினை அறிந்து மகிழும் பெற்றோரின் மனநிலையைக் காட்டியுள்ளார்.*

**முடிவுரை**

*கணவன் மனைவி உறவில் இருவரும் ஆசைமொழி பேசுவதற்கு வயது முக்கியமில்லை என்பதையும், மனம் விட்டுப் பேசுவதால் குடும்பச் சிக்கல்களைத் தீர்த்துக்கொள்ள முடியும் என்பதையும்காட்டுகிறார். முதலில் மனக்கசப்பினை ஏற்படுத்திப் பின்பு ஒவ்வொருவரும் மற்றவர் உணர்வினையும் ஆசையினையும் புரிந்துகொண்டு சிறந்த முறையில் தங்கள் வாழ்வினை வளப்படுத்திக் கொள்கின்றனர் என்பதை அறியலாம்.*

**சான்றெண் விளக்கம்**

1. *பாஸ்கல் கிஸ்பர்க் எஸ்.ஜெ.நாராயணன் (மொ.பெ.ஆ), சமூகவியல் அடிப்படைக் கோட்பாடுகள், ப.3.*
2. *பாஸ்கல் கிஸ்பர்க் எஸ்.ஜெ.நாராயணன் (மொ.பெ.ஆ), சமூகவியல் அடிப்படைக் கோட்பாடுகள், ப.99.*
3. *முருகுரத்தினம், சேதுபாண்டியன் முதலியோர், தமிழியல் ஆய்வு, ப.13.*
4. *சு.வேங்கடராமன், சிறுகதைக் கலைஞர் ஜெயகாந்தன், ப.50.*
5. *முத்துலட்சுமி ராகவன், அந்தி வானம், ப.233.*
6. *முத்துலட்சுமி ராகவன், பூமிக்கு வந்த நிலவு, ப.179.*
7. *முத்துலட்சுமி ராகவன், நிழலோடு நிழலாக, ப.56.*
8. *முத்துலட்சுமி ராகவன், பூமிக்கு வந்த நிலவு, ப.234.*
9. *முத்துலட்சுமி ராகவன், நிழலோடு நிழலாக, ப.212.*
10. *முத்துலட்சுமி ராகவன், மோகத்தைக் கொன்றுவிடு, ப.252.*
11. *முத்துலட்சுமி ராகவன், யாரோடு யாரோ, ப.10.*
12. *குறுந்.167.*
13. *முத்துலட்சுமி ராகவன், காலை நேரக்காற்று, ப.30.*

## References


1. *Pascal Kisberg, S.J. Narayanan (M.P.A.), Samoogaviyal Adipadai Kotpadugal, P.3.*
2. *Muruguratnam, SethuPandian, Tamiliyal Aaivu, P.13.*
3. *Venkataraman, S., Sirukathai Kalainjar Jeyakanthan, P.50.*
4. *Muthulakshmi Raghavan, Anthi Vaanam, P.233.*